## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 125/ந/2024
நாள்: 26.12.2024

| | | |
|---|---|---|
| திரு.G.ஜெயபிரகாஷ்,<br>கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>கோவில்பட்டி நகராட்சி, கோவில்பட்டி | – | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, கதிரேசன் கோவில் தெரு, கதவு எண்.50–B என்கிற முவரியில் வசிக்கும் திரு.G.ஜெயப்பிரகாஷ் என்பவரின் 30.01.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2024 அன்று பெறப்பட்டு, 125/ந/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, கதிரேசன் கோவில் தெரு, கதவு எண்.50–B என்கிற முவரியில் வசிக்கும் திரு.G.ஜெயப்பிரகாஷ் என்பவர் தமது 30.01.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கோவில்பட்டி டவுன் கதிரேசன் கோவில்தெரு, முன்வார்டு 25, பழைய வார்டு 28, புதுவார்டு 27 நத்தம் சர்வே எண்ஒ.554/1–ல் ஏக்கர் 3 செண்டு 95–யை பல பிளாட்டுகளாக பிரித்து 1971ஆம் ஆண்டு பிளாட் எண்.71க்கு 3 செண்டு எனது தகப்பனார் ஞானதாஸ் பெயருக்கு இலவச வீட்டுமனை பட்டா பெற்று வீடு கட்டி ஆண்டு அனுபவித்து வந்தார். பிளாட் எண்.77க்கு 4 செண்டு எனது தாத்தா தங்கச்சாமிக்கு வீட்டுமனை ஒப்படைவு பெற்று அதில் வீடுகள் கட்டி ஆண்டு அனுபவித்து மேற்படி பிளாட் எண்.77க்கு கீழ்புறமுள்ள பிளாட் எண்.72, தென்புறமுள்ள பிளாட் எண்.78 ஆகிய பிளாட்டுக்களை எனது தாத்தா தங்கச்சாமி, எனது தகப்பனார் ஞானதாஸ் இருவர் அனுபவத்தில் இருந்து வந்து அவர்கள் காலமாகிவிட்டபடியால் மனுதாரர் ஆகிய நானும் எனது சகோதரர் தங்கப்பூ இருவரும் அனுபவித்து வருகிறோம்.

மேற்படி கோவில்பட்டி நகரம் நத்தம் சர்வே எண்.554/1யை 1978 ஆம் ஆண்டு முதல் 1982 வரை நகரளவை செய்யப்பட்டு மேற்படி நத்தம் சர்வே நம்பரில் உள்ள பிளாட்டுகளுக்கு 1985ம் ஆண்டு நகரளவை எண்கள் கொடுக்கப்பட்டு 1985ம் ஆண்டு 9(2) நோட்டீஸ் ஒப்படைவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்புட்டி வட்டம், கோவில்புட்டி டவுன், கதிரேசன் கோவில் தெரு, பழைய வார்டு 28, புது வார்டு 27 நத்தம் சர்வே நம்பர் 554/1 வார்டு B பிளாக்–6ல் பழைய பிளாட் எண்.72–க்கு நகரளவை எண்.180–ல் கதவு எண்கள். 50C2, 4E. 4F, பழைய பிளாட் எண்.77க்கு நகரளவை எண்.179ல் உள்ள கதவு எண்.50C1, பழைய பிளாட் எண்.78க்கு நகரளவை எண்.191–ல் கதவு எண்கள் 4G, 4H, 4I. 4J உள்ள மேற்படி பிளாட் எண்கள் அதனுடைய நகரளவை எண்களில் எனது தகப்பனால் ஞானதாஸ் அவருடைய சகோதரர் அமுதன் தாலுகா அலுவலகத்தில் சர்வேயராக வேலை பார்க்கும்போது அவரது பதவியை பயன்படுத்தி அவருக்கு வேண்டிய அலுவலர்கள் உதவியுடன் நகரளவை எண்களில் அவரது பெயரையும் மூத்த சகோதரர் ராஜாமணி பெயரையும் மோசடியாக சேர்த்ததாக கோவில்பட்டி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 2001ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்து ஆ/7911/2011 நாள் 18.03.20/04ம் ஆண்டு அமுதன், ராஜாமணி பெயரை நீக்கிய நிலங்கள் எனது தகப்பனாரால் ஞானதாஸ் எனது தாத்தா தங்கச்சாமி அனுபவத்தில் இருந்து வந்து அவர்களது காலத்திற்குபின் எங்கள் இருவர் அனுபவத்தில் இருந்து வருகிறது.

மேற்படி நிலத்தை மனுதாரர் ஆகிய நானும் எனது சகோதரர் தங்கப்பூ எங்கள் இருவர் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று ராஜாமணிக்கு நன்கு தெரிந்து மோசடி நோக்குடன் கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.6245/2013 நாள் 28.06.2013–ன்படி தர்மராஜ் என்பவருக்கு கிரைய பதிவு செய்து கொடுத்ததை சார்பதிவாளர் அவர்களும் ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் பத்திரபதிவு செய்து கொடுத்துள்ளார்கள். பத்திரத்தில் காட்டப்பட்ட 1–வது தபசில் சொத்தில் பிளாட் எண் 74 (தெரு) சர்க்கார் புறம்போக்கு ஆகும்.

2–வது தபசில் காட்டப்பட்ட பிளாட் எண்.77க்கு செண்டு 4 எனது தாத்தா தங்கச்சாமி பெயரில் ஒப்படைவு செய்யப்பட்டது. பிளாட் எண்.72க்கு செண்ட் 4 யாருக்கும் ஒப்படைவு செய்யாமல் எனது தாத்தாவும், எனது தந்தையின் அனுபவத்தில் இருந்து வந்தது. பிளாட் எண்.71க்கு செண்ட் 3 எனது தகப்பனாருக்கு தமிழக அரசால் 1971ம் ஆண்டு ஒப்படைவு பெற்ற சொத்தாகும். இந்த சொத்துக்களை ராஜாமணி கிரையம் கொடுக்க எந்த உரிமையும் இல்லை.

மேற்படி ராஜாமணி கிரையம் கொடுத்த சர்வே நம்பரில் உள்ள பிளாட்டுகளில் உள்ள வீட்டின் கதவு எண்கள் 50C1, 50C2, 4E, 4F என்றும் கடையின் கதவு எண்கள். 4G, 4H, 4I, 4J தபசில் சொத்து விவரம் சரி என்று சொத்து மதிப்பு காட்டப்பட்ட விவரம் பொய்யானவையே.

மேற்படி ராஜாமணியிடம் கிரையம் வாங்கிய தர்மராஜ் வீட்டு கதவு எண்கள். 50C2, 4E, 4F, கடை கதவு எண்கள்.4G, 4H, 4I, 4J ஆகிய கட்டிடங்களை 2013ம் ஆண்டே இடித்து கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 22.10.2013ம் ஆண்டு பத்திரப்பதிவு 8985/2013–ன்படி J.ஜெயப்பிரகாஷ் என்பவருக்கும் பத்திர பதிவு எண்.8986/2013ன்படி

ஜெகதீஸ் என்பவருக்கும் பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி பத்திர பதிவு எண்.8985/2013ல் தபசில் விவரம் காட்டப்பட்ட பக்கம் 6ல் 4E, 4F. 4G, 4H, 4I, 4J கதவு எண்களின் கட்டிடங்களை இடித்து காலிமனையாக உள்ள நிலத்துக்கு நான்கு எல்லை என்று காட்டப்பட்டிருக்கும் விவரம் நன்கு துலங்கும்.

மேற்படி தர்மராஜ் என்பவர் J.ஜெயப்பிரகாஷ் அவர்களுக்கு கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த பத்திர பதிவு எண்.8985/2013–ன்படி பத்திரத்தின் பக்கம் 6–ல் உள்ள தபசில் 4E, 4F, 4G, 4H, 4I, 4J கதவு எண்களின் கட்டிடங்களை இடித்து காலிமனையாக உள்ளது என்று காட்டியும் கோவில்பட்டி நகராட்சியில் லஞ்ச, லாவண்யத்தை பெற்றுக்கொண்டு கட்டிடங்கள் இல்லை என்று தெரிந்தும் மோசடி நோக்குடன் மேற்படி கதவு எண்கள் இருப்பது போல் 15.03.2023 அன்று சொத்துவரி பெயர் மாற்றம் செய்து 1 முதல் 5 வரையிலான அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும், இடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்ய வேண்டுமென்றும் இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

மேற்படி இடங்கள் சம்மந்தமாக கோவில்பட்டி கோட்டாட்சியர் அவர்கள் நீதிமன்றத்தில் எனது தகப்பனார் ஞானதாஸ் அவரது சகோதரர் அமுதன் தாலுகா அலுவலகத்தில் சர்வேயராக வேலை பார்க்கும்போது தனக்கு வேண்டிய அலுவலர்கள் உதவியுடன் ஆவணங்களில் அவர் பெயரையும், ராஜாமணி பெயரையும் மோசடியாக சேர்த்ததாக வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு எண்.ஆ5/7911/2001 நாள் 18.03.2004ன் உத்தரவில் இலவச வீட்டுமனை பட்டாவில் கண்ட பிளாட் எண்.71க்கு 3 செண்ட் ஞானதாஸ்க்கும் பிளாட் எண்.77க்கு செண்ட் 4 தங்கச்சாமி பெயருக்கும் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு எங்களது தாத்தா, தகப்பனார் அனுபவத்தில் இருந்து வந்து அவர்கள் காலஞ்சென்ற பின் அது தற்போது எங்களது அனுபவத்தில் இருந்து வருகிறது.

அதன்பின் மேற்படி இடங்கள் சம்மந்தமாக அமுதன் தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் 2004ம் ஆண்டு மேல்முறையீடு செய்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கோவில்பட்டி கோட்டாட்சியர் உத்தரவை உறுதிபடுத்தி உத்தரவிடப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்பு அமுதன் நில நிர்வாக சிறப்பு ஆணையர் சேப்பாக்கத்தில் 2008ம் ஆண்டு மேல்முறையீடு செய்து தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து அமுதன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு 2008ம் ஆண்டு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் உத்தரவுபடி கோவில்பட்டி வட்டாட்சியர் அவர்கள் நத்தம் சர்வே நம்பர் 554/1–ல் உள்ள பிளாட்டுகளின் நகரளவை எண்கள்.179,180,185,190,191 ஆகியவைகளை 2008 ம் ஆண்டு நீக்கம் செய்து உத்தரவிட்டு நகரளவை பதிவேட்டிலும் நீக்கம் செய்யப்பட்ட நிலம் மனுதாரர் ஆகிய நானும் எனது சகோதரர் தங்கப்பூ இருவரும் அனுபவித்து வருகிறோம்.

மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ரத்து செய்து உத்தரவிட்டதை எதிர்த்து மேற்படி நிலங்கள் சம்மந்தமாக அமுதன் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2011ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்ய் அமுதன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து அமுதன் கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் 2013ம் ஆண்டு மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து அமுதன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து அமுதன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இரண்டாம் மேல்முறையீடு

2020ம் ஆண்டு தாக்கல் செய்து தற்போது வரை நிலுவையில் உள்ளது. இந்த வழக்குகளில் ராஜாமணி ஆஜராகவில்லை. இந்த வழக்கில் 5–வது எதிர்மனுதாரராக கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரும், எனது தந்தை 02.10.2022ல் காலமாகிவிட்டபடியால், நானும் எனது சகோதரன் தங்கப்பூவும் இந்த வழக்கில், 8–வது, 9வது எதிர்மனுதாரர்களாகவும் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வருகிறோம்.

மேற்படி நத்தம் சர்வே நம்பரில் உள்ள கட்டிடங்கள் சம்பந்தமாக கோவில்பட்டி நகராட்சியில் தகவலறியும் உரிமைச்சட்டப்படி 30.06.2023 அன்று தகவல் கேட்டு அதற்கு பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் வழங்கிய தகவலில் தான் மேற்படி பத்திர பதிவு எண்.8985/2013 பத்திரத்தின் தபசில் 4E,4F,4G,4H,4I, 4J கதவு எண்கள் கொண்ட கட்டிடங்கள் இடிக்கப்பட்டு காலிமனைக்கு என்று உள்ள நிலையில் இடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு 15.03.2023ல் J.ஜெயப்பிரகாஷ் பெயரில் சொத்துவரி மாற்றம் செய்த விவரம் தெரிய வந்தது. இல்லாத கட்டிடத்திற்கு 15.03.2023ல் சொத்து வரி பெயர் மாற்றம் செய்த கோவில்பட்டி நகராட்சி அலுவலர்களால் மறுபடியும் மோசடி பத்திரப்பதிவு 16.03.2023 அன்று J.ஜெயப்பிரகாஷ் கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் நித்யானந்தம் என்பவருக்கு 2505/2023ன்படி பத்திர பதிவு செய்து கொடுத்த பத்திரத்திலும் தபசில் சொத்தில் காட்டப்பட்ட விவரத்தில் கட்டிடங்கள் இடித்த காலிமனை என்று தான் உள்ளது.

தற்போது கோவில்பட்டி நகராட்சி அலுவலகத்திலுள்ள பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மேலாளர் அவர்களும், மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களும் 15.03.2023ல் சொத்துவரி பெயர் மாற்றம் செய்த அலுவலர்களுக்கு அனுசரணையாக பொய்யான தகவல் கொடுத்து மோசடிக்கு உறுதுணையாக செயல்பட்டு வருவதால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு உட்பட்டு இருந்து வருகிறேன்.

ஆகவே கனம் முறைமன்ற நடுவர் அவர்கள் கிருபை செய்து மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் புகார் மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் 2014 சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கவும், இடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மோசடியாக சொத்துவரி பெயர் மாற்றம் செய்த 1 முதல் 5 வரையிலான அலுவலர்களை விசாரணை செய்து அவர்கள் மீது துறைவாரியான நடவடிக்கை எடுக்கவும், மனுதாரர் ஆகிய எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட செலவு தொகை மற்றும் விசாரணைக்கு வந்து செல்லும் செலவு தொகை ஆகியவற்றை எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்று கொடுக்குமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) கோவில்பட்டி நகராட்சி ஆணையர் தனது 18.09.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"திரு.J.ஜெயப்பிரகாஷ் த/பெ. ஜனகராஜ் என்பவரிடமிருந்து சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய வேண்டி மனையின் உரிமைக்கான ஆவணங்கள், ஏற்கனவே M.தர்மராஜ் என்பவரின் பெயரில் சொத்துவரி செலுத்தப்பட்டமைக்கான சொத்து பற்று சீட்டு நகல்கள் இணைத்து 02.11.2022 அன்று விண்ணப்பம் பெறப்பட்டது. மேற்கண்ட விண்ணப்பம் இவ்வலுவலக ந.க.எண்.4877/2022/அ1 எண்ணிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருந்த கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் கிரைய ஆவணம் எண.8985/2013–ன்படி திரு.மு.தர்மராஜ் என்பவர் திரு.J.ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு கோவில்பட்டி டவுன் நத்தம் சர்வே எண்.554/1 நம்பரில் ஏக்கர் 3 செண்ட் 95–ல் எண்.74க்கு சதுர மீட்டர் 166.70க்கு செண்ட் 4.12 அளவிலான காலிமனை நிலமும், பிளாட் எண்.77க்கு சென்ட் 4.00ம், பிளாட் எண்.71க்கு சென்ட் 400ம் பிளாட் எண்.72க்கு 4.00 ஆக மொத்தம் செண்ட் 12.00ல் மையம் சதுர மீட்டர் 208.193க்கு செண்ட் 5.14 ஆக மொத்தம் சதுர அடி 4035, 375க்கு காலிமனை நிலத்தில் தற்போது உள்ள மனையின் விபரம் கதவு எண்கள்.4E, 4F, 4G, 4H, 4I, 4J ஆகிய கட்டிடங்கள் இடிந்து தற்போது காலிமனையாக உள்ள இடத்தை கிரையமாக எழுதி கொடுத்துள்ளார்.

மேற்கண்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தபசில் சொத்து விபரத்தில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு ஏற்கனவே கீழ்கண்டவாறு திரு.தங்கராஜ் என்பவர் பெயரில் இந்நகராட்சியால் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கதவு எண். | வரிவிதிப்பு எண். | பழைய வரிவிதிப்புபடி |
|---|---|---|---|
| 1. | 4E | 137/027/900287 | 137/29306 |
| 2. | 4F | 137/027/900123 | 137/29309 |
| 3. | 4G | 137/027/900818 | 137/29980 |
| 4. | 4H | 137/027/900819 | 137/29981 |
| 5. | 4I | 137/027/900820 | 137/29982 |
| 6. | 4J | 137/027/900821 | 137/29983 |

மேற்கண்டவாறு இந்நகராட்சி சொத்துவரி கேட்பு ஆவணங்களில் கண்டுள்ளவாறு திரு.M.தங்கராஜ் என்பவர் பெயரில் சொத்துவரி விதிக்கப்பட்டிருந்த கட்டிட மனைகளின் உரிமையினை திரு.J.ஜெயப்பிரகாஷ் த/ப. ஜனகராஜ் என்பவரின் பெயரில் கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவணம் எண்.8995/2013–ன்படி அனைத்து உரிமைகளையும் அனுபவித்து வருகிறார்.

மேற்கண்ட இடம் M.P. ராஜாமணி த/பெ.தங்கச்சாமி என்பவரிடமிருந்து கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலர் கிரைய ஆவணம் எண்.6245/2013–ன்படி திரு.M.தங்கராஜ் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கதவு எண். | வரிவிதிப்பு எண். | பழைய வரிவிதிப்புபடி |
|---|---|---|---|
| 1. | 4E | 137/0001920 | 15.03.2023 |
| 2. | 4F | 137/0019009 | 15.03.2023 |
| 3. | 4G | 137/0019008 | 15.03.2023 |
| 4. | 4H | 137/0019007 | 15.03.2023 |
| 5. | 4I | 137/0019005 | 15.03.2023 |
| 6. | 4J | 137/0019006 | 15.03.2023 |

மேற்கண்ட மனையில் அமைந்திருந்த கட்டிடங்களுக்கு புதியதாக இந்நகராட்சியில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்படாமல், சொத்துவரி பெயர் மாற்றம் மட்டும் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் திரு.J.ஜெயப்பிரகாஷ் என்பவரால் தனது மனை உரிமைக்கான அனைத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் மற்றும் நகரளவை ஆவணங்களின் நகல்களுடன் இந்நகராட்சியில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் சட்டவிதிமுறைகளுக்கு உட்படுத்தப்பபட்டு சொத்துவரி விதிப்பு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4) மனுதாரரும் மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆணையரும் 28.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் திரு. ஜெயப்பிரகாஷ், 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"2013–ஆம் ஆண்டு இடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு 15.03.2023 அன்று சொத்துவரி பெயர் மாற்றம் 8 கட்டிடங்கள் இருப்பதுபோல் திரு.தர்மராஜ் பெயரில் இருந்து திரு.J.ஜெயப்பிரகாஷ் பெயருக்கு மாற்றம் செய்ததாக உள்ளது. ஆனால் சொத்துவரி ரசீது 08.11.2022 என உள்ளது. இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்ட சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்து. இதில் எனக்கும் பங்கு உண்டு. அதனால் பழைய சொத்துவரி பெயர் மாற்றத்தை ரத்து செய்தும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் SA(MD)325/2020 வழக்கு முடியும் வரை கட்டிட அனுமதி, சொத்துவரி விதிப்பு செய்ய அனுமதிக்கக்கூடாது என உத்தரவிட இம்முறைமன்ற நடுவத்தை வேண்டுகிறேன்.

6)கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 25.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோவில்பட்டி நகராட்சிக்கு திரு.G.ஜெயப்பிரகாஷ் என்பவர் அளித்த மனுவின்படி திரு.J.ஜெயப்பிரகாஷ் என்பவர் கோவில்பட்டி நகராட்சி வார்டு–27, கதிரேசன் கோவில் ரோடு, கதவு எண்கள்.4E, 4F,4G,4H,4I, 4J ஆகியவற்றின் சொத்துவரி விதிப்பு எண்கள்.137/027/900282, 137/027/900283, 137/027/900819, 137/027/900819, 137/020/900820, 137/027/900821 ஆகிய 6 வரிவிதிப்புகளும் இடிந்து காலியிடமாக இருப்பதாகவும் மேலும் உரிய ஆவணம் இன்றி பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவரது மனு பரிசீலிக்கப்பட்டது. முதற்கட்ட நடவடிக்கையாக திரு.J.ஜெயப்பிரகாஷ் என்பவரிடமிருந்து பெயர் மாற்றம் செய்ய வேண்டி பெறப்பட்ட விண்ணப்பம் ந.க.எண்.3522/2022/அ1 நாள்.08.11.2022 இணைக்கப்பட்டுள்ள கோப்புகள் சரிபார்க்கப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணம் எண்.8985/2013 கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பெற்ற கிரைய ஆவணம். மேலும் திரு.மு.தர்மராஜ் என்பவர் திரு.J.ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு கோவில்பட்டி டவுன் நத்தம் சர்வே எண்.554/1 நம்பரில் ஏக்கர் 3 சென்ட் 95–ல் பிளாட் எண்.74க்கு சதுர மீட்டர் 166.70க்கு சென்ட் 4.12 அளவிலான காலிமனை நிலமும், பிளாட் எண்.77க்கு சென்ட் 4.00ம், பிளாட் எண்.71க்கு சென்ட் 4.00ம் பிளாட் எண்.72க்கு சென்ட் 4.00 ஆக மொத்தம் சென்ட் 12.00ல் மையம் சதுரமீட்டர் 208.193க்கு சென்ட் 5.14 ஆக மொத்தம் சதுர அடி 4035.375க்கு காலிமனை நிலத்தில் தற்போது உள்ள மனையின் விபரம் கதவு எண்கள்.4E, 4F, 4G,

4H,4I, 4J ஆகிய கட்டிடங்கள் இடிந்து தற்போது இடித்து காலிமனையாக உள்ளது. இடத்தை கிரையமாக எழுதி கொடுத்துள்ளார்.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக இந்நகராட்சியிலிருந்து இம்மனுவின் மீது நேரடி விசாரணைக்கு கலந்துகொள்ள வேண்டி திரு.J.ஜெயப்பிரகாஷ் மற்றும் திரு.G.ஜெயப்பிரகாஷ் ஆகிய இருவருக்கும் அறிவிப்பு கடிதம் நாள் **16.08.2023** அன்று அனுப்பப்பட்டு பின் **30.11.2023** அன்று இவ்வலுவலகத்தில் வைத்து ஆணையாளர் முன் நேரடி விசாரணை செய்யப்பட்டதில் கோப்பில் இணைக்கப்பட்டிருந்த கிரைய ஆவணத்தில் உள்ள நகரளவு எண் தொடர்பான விவரத்தை அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டி அறிவுறுத்தப்பட்டது.

மூன்றாம் கட்ட நடவடிக்கையாக இடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டிடங்கள் முற்றிலுமாக இடிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவது தெரிய வருகிறது. மேலும் அந்த புதிய கட்டிடம் பணி நிறைவடைந்த பின் புதிய சொத்துவரி விதிப்பு உரிய ஆவணத்தின்படி வரிவிதிப்பு செய்யப்படும் என்ற விபரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**7) எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளரும் 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:-**

ஆவணம் எண்.8985/2013 கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட கிரைய சாசன ஆவணத்தின்படி மேற்படி இடம் 4E, 4F,4G,4H,4I, 4J நீர் கட்டிடங்களாக இருந்து தற்போது இடிந்து காலிமனையாக உள்ள நிலத்துக்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ப.கோ.51/பெ.மா.ம.எ.எண்.3522/22/அ1 நாள் 15.03.2023 அன்று 137/27/900819, 137/927/900820, 137/027/900821 என்ற 6 வரி விதிப்புகளுக்கு அன்று திரு.மு.தர்மராஜ் என்ற பெயரிலிருந்து J.ஜெயப்பிரகாஷ் என்ற பெயருக்கு சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது.

தற்போது மேற்படி இடம் கள ஆய்வு செய்தபோது மேற்படி கட்டிடங்கள் முற்றிலுமாக இடிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடங்களுக்கு புதிய வரிவிதிப்பு செய்ய விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ள சர்வே எண்.554/1 என்ற இடம் அரசு புறம்போக்கு என உள்ளது. தற்போது அந்த இடத்தில் சுமார் 200 வீடுகளுக்கு மேல் உள்ள வீட்டிற்கு மேல்கோப்பு வரி விதிக்கப்பட்டு சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய வரிவிதிப்பு செய்ய ஆட்சேபனை மனு பெறப்பட்டுள்ளதால் புதிய வரிவிதிப்பு இதுவரை செய்யப்படவில்லை.

மேலும் நகராட்சிக்கு வருமானத்தை கருத்தில் கொண்டே புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு மேற்கோப்பு வரி விதிக்கலாம். அவ்வாறு விதிக்கப்படும் வரியினை நீதிமன்ற வழக்குகளுக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ள இயலாது. இருப்பினும் ஆணையாளர் அவர்களால் விதிக்கப்பட்ட மேற்கோப்பு வரியினை வழக்கு தீர்ப்பின் அடிப்படையிலோ, அல்லது நிர்வாக காரணங்களுக்காகவோ தேவைப்படும் போது வரிவிதிப்பு ரத்து செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் எனது ந.க.எண்.3287/2024/அ1 நாள்.25.10.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை எங்களது மேல் வாக்குமூலமமக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

**8) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையர், நகராட்சி வருவாய் ஆய்வாளர் இருவரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்திருக்கும் இடம் தொடர்பான வழக்கு எண்.SA(MD) 325/2020 சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் இன்று வரையில் நிலுவையில் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலத்தில், மேற்படி வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் அல்லது நிர்வாக காரணங்களுக்காகவோ தேவைப்படும் போது வரிவிதிப்பு ரத்து செய்யலாம் என தெரிவித்துள்ளனர்.

2014 – ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)ன்படி நீதிமன்றம் ஒன்றில் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

Sec.10(3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) **x x x x x**

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1962 or any matter pending before a Court.

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள பொருள் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நிலுவையில் உள்ளதால், மேற்காணும் சட்டப்பிரிவு 10(3) (b) –ன்படி, இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு, டிசம்பர் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.G.ஜெயப்பிரகாஷ்,
த/பெ. திரு.ஞானதாஸ்,
50–B. கதிரேசன் கோவில் தெரு,
கோவில்பட்டி – 628 502.
தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி,
கோவில்பட்டி.
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)